Yesu Karunanidhi

**24 மார்ச் 2016: ஆண்டவரின் இறுதி இராவுணவுத் திருப்பலி**

**இது வாழ்வின் மறைபொருள்**

அ. இன்றைய நாளின் ஐந்து மறைபொருள்கள்

1. 'இது என் உடல், இது என் இரத்தம்' என்று ஏற்படுத்தப்பட்ட நற்கருணை (காண். இரண்டாம் வாசகம். 1 கொரி 11:23-26)
2. 'இதை என் நினைவாகச் செய்யுங்கள்' என்று ஏற்படுத்தப்பட்ட பணிக் குருத்துவம் (லூக் 22:19).
3. 'நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன்' (யோவா 13:15) என்று பாதம் கழுவி பணிவிடை பற்றிய பாடம்.
4. 'இதோ உங்களுக்கு ஒரு புதிய கட்டளை கொடுக்கிறேன். நான் உங்களை அன்பு செய்தது போல, நீங்களும் ஒருவர் மற்றவரை அன்பு செய்யுங்கள்' என்று கொடுக்கப்பட்ட அன்புக் கட்டளை (யோவா 13:34-35).
5. இவை எல்லாவற்றின் பின்புலமாக, முதல் ஏற்பாட்டில் இஸ்ரயேல் மக்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து, மோசே தலைமையில் புறப்படுவதற்குமுன் கொண்டாடிய முதல் பாஸ்கா உணவு (காண். முதல் வாசகம் விப 12:1-8, 11-14).

ஆ. இன்று நாம் வாசிக்கக் கேட்ட நற்செய்திப் பகுதியை (யோவான் 13:1-15), தொடக்கக் கிறிஸ்தவர்களின், 'கிறிஸ்தியல் பாடலான' தூய பவுலடியாரின் பிலிப்பியர் 2:6-11 பகுதியோடு இணைத்துப் பார்ப்போம்.

'நேரம் வந்துவிட்டது என்று உணர்ந்தபோது' - 'காலம் நிறைவேறியபோது'
'இயேசு' - 'கடவுள் வடிவில் விளங்கிய அவர்'
'பந்தியிலிருந்து எழுந்து' - 'கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை விடுத்து'
'தம் மேலுடையைக் கழற்றி வைத்துவிட்டு' - 'தம்மையே வெறுமையாக்கி'
'ஒரு துண்டை எடுத்து இடுப்பில் கட்டி' - 'அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்'
'சீடர்களின் பாதங்களைத் தண்ணீரால் கழுவி' - 'சாவை ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து'
'துண்டால் துடைத்தார்' - 'தம்மையே தாழ்த்திக்கொண்டார்'
'காலடிகளைக் கழுவியபின் மேலுடையை அணிந்து கொண்டு மீண்டும் பந்தியில் அமர்ந்தார்' - 'கடவுளும் அவரை மிகவே உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்'

இந்த ஒப்பீடு எதைக் காட்டுகிறது என்றால், இயேசு தம் சீடர்களின் பாதம் கழுவும் நிகழ்வு அவரின் பிறப்பு, பணிவாழ்வு, பாடுகள், இறப்பு, உயிர்ப்பு என்னும் ஐந்து வாழ்வியல் நிலைகளின் சுருக்கமாக இருக்கிறது. ஆக, இந்த ஒரு நிகழ்வை நாம் புரிந்து கொண்டால், அவரின் இந்த ஐந்து வாழ்வியல் நிலைகளையும் நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

இ. வாக்கும் விளக்கமும்

'யூதர்களின் பாஸ்கா விழா தொடங்கவிருந்தது' எனத் தொடங்குகிறது இன்றைய நற்செய்தி வாசகம். யோவான் நற்செய்தியில் இயேசு மூன்றுமுறை பாஸ்கா கொண்டாடுகிறார் (காண். 2:13, 23, 6:4). யோவான் 12:1, 9, 12, 20 ஆகிய வசனங்கள் இயேசுவின் இந்த மூன்றாம் பாஸ்கா குறித்த முன்னோட்டம் தருகின்றன.

'அறிந்திருந்தார்' - 'அன்பு செய்தார்.' இந்த இரண்டு வார்த்தைகள் இயேசுவின் பாதம் கழுவும் நிகழ்வில் திரும்பத் திரும்ப வருகின்றன:

'தந்தையிடம் செல்வதற்கான நேரம் வந்துவிட்டது' என்பதை அறிந்திருக்கிறார் (13:1).
'தான் கடவுளிடமிருந்து வந்ததுபோல் அவரிடமே திரும்பச் செல்ல வேண்டும்' என்பதை அறிந்திருக்கிறார் (13:3).
'திரும்பிச் செல்ல வேண்டும்' என்ற சொல்லாடலைப் பயன்படுத்தவதன் வழியாக, யோவான் தான் முன்னுரைப் பாடலில் எழுதியதை நிறைவாக்குகின்றார். 'தொடக்கத்தில் வாக்கு இருந்தது. அவ்வாக்கு கடவுளோடு இருந்தது. அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது' (1:1). கடவுளிடமிருந்து இறங்கி வந்த வாக்கு கடவுளிடமே திரும்பிச் செல்கின்றது.
'தன் சீடர்கள் தன்னைப் புரிந்து கொள்ள மாட்டார்கள்' என்பதை அறிந்திருந்தார் (13:7).
'தன்னை யார் காட்டிக் கொடுப்பார்?' என்பதை அறிந்திருந்தார்.

'உலகில் வாழ்ந்த தமக்குரியோர்மேல் இயேசு அன்பு செய்கின்றார். 'தமக்குரியோர்' என்ற சொல்லாடல் யோவான் நற்செய்தியாளரின் முன்னுரைப் பாடலில், 'அவர் தமக்குரியவர்களிடம் வந்தார். அவருக்கு உரியவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை' (1:11) என்று எதிர்மறை பொருளில் உள்ளது.

இயேசு அன்பு செய்த விதம் கிரேக்கத்தில் 'எய்ஸ் டெலோஸ்' என்று கொடுக்கப்பட்டுள்ளது. இந்த சொல்லாடலை 'இறுதி வரை' என்று நேரத்தை மையப்படுத்தியும், 'நிறைவாக' என்று அன்பின் தன்மையை மையப்படுத்தியும் மொழிபெயர்க்கலாம்.

இயேசுவின் பாதம் கழுவும் நிகழ்வை அறிமுகம் செய்யும் யோவான், இயேசுவைப் பற்றி சொன்னவுடன், உடனடியாக யூதாசு இஸ்காரியோத்து பற்றி சொல்லத் தொடங்குகின்றார். யூதாசைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'அலகை யூதாசிடம் காட்டிக்கொடுக்கும் எண்ணத்தை விதைத்ததாக' (13:2) எழுதுகிறார். 'அலகை' என்பது கடவுளின் எதிரி. யோவான் நற்செய்தியாளர் இயேசுவின் இறுதி இராவுணவை, கடவுளுக்கும் அலகைக்கும் எதிரான, ஒளிக்கும் இருளுக்கும் எதிரான போராட்டமாகப் பதிவு செய்கின்றார் யோவான்.

இயேசுவின் பாதம் கழுவும் சடங்கை ஐந்து வினைச்சொற்களில் சொல்கின்றார் யோவான்:

அ. மேலாடையைக் 'கழற்றி.' இங்கே பயன்படுத்தப்படும் 'திதேமி' என்ற கிரேக்க வார்த்தைதான் இயேசு தன் உயிரைக் 'கையளித்தார்' என்று சொல்லவும் பயன்படுத்தப்படுகிறது (காண். 10:15, 17-18, 10:11, 3:37-38, 15:13).பாதம் கழுவும் நிகழ்வே இயேசு தன் உயிரைக் கையளிக்கும் நிகழ்வின் முன்னோட்டமாக அமைகிறது.
ஆ. துண்டை இடுப்பில் 'கட்டி.' காலடிகளைக் கழுவுதல் என்பது இயேசுவின் சமகாலத்தில் புழக்கத்தில் இருந்த ஒரு செயல். மூன்று காரணங்களுக்காக காலடிகள் கழுவப்பட்டன: (1) தனிநபர் சுகாதாரம், (2) விருந்தோம்பலின் அடையாளம், (3) வழிபாடு செய்யுமுன் அல்லது ஆலயத்திற்குள் நுழையுமுன். இங்கே 2ஆம் காரணம்தான் மேலோங்கியிருக்கிறது என்றாலும் (காண். தொநூ 18:4, 19:2, 43:24, லூக் 7:44), விருந்து தொடங்குவதற்கு முன்பே விருந்துக்கு அழைத்தவரோ, அல்லது அவரின் சார்பாக அவரின் பணியாளரோ, அல்லது விருந்தினரே காலடிகளைக் கழுவுவர். விருந்தின் பாதியில் இயேசு காலடிகளைக் கழுவுவது ஆச்சர்யமாக இருக்கிறது. இயேசு ஒரே நேரத்தில் விருந்தினராகவும், பணியாளராகவும் மாறுகின்றார்.
இ. தண்ணீர் 'எடுத்து'
ஈ. காலடிகளைக் 'கழுவி'
உ. துண்டால் 'துடைத்தார்.' 'துடைத்தார்' என்ற வார்த்தை 'இயேசுவுக்கு நறுமணத் தைலம் பூசிய பெண்ணை நினைவுபடுத்துகிறது' (காண். 12:1-8).

பேதுருவின் காலடிகளை இயேசு முதலில் கழுவினார் என்று அகுஸ்தினாரும், கடைசியில் கழுவினார் என்று ஒரிஜெனும் சொல்கின்றனர். ஆனால், இங்கே பேதுரு எல்லா சீடர்களின் பிரதிநிதியாகத் தான் இருக்கிறாரே தவிர, அவர் இந்நிகழ்வின் மையம் அல்ல. இயேசுவின் செயலைத் தடுக்கின்றார் பேதுரு. தன் செயலை செய்வதற்கு அனுமதிக்காவிட்டால் தன்னோடு பங்கில்லை என்று சொல்வதுடன், தான் செய்வதன் பொருள் பின்னால் விளங்கும் என்கிறார் இயேசு. தனக்கு அர்த்தம் புரிந்து விட்டதாக நினைத்து, 'என் கைகளையும் தலையையும்கூட கழுவும்' என்கிறார் பேதுரு. அவருக்கு தொடர்ந்து பதில் சொல்லும் இயேசுவின் பேச்சு, 'கழுவுதல்' என்பதிலிருந்து, 'தூய்மையாதல்' என்பதை நோக்கிய இறையியலாக வளர்கிறது. 'நீ-நான்' என பேதுருவிடம் பேசிக்கொண்டிருக்கும் இயேசு, திடீரென பன்மையில், 'நீங்கள் தூய்மையாய் இருக்கிறீர்கள். நீங்கள் அனைவரும் தூய்மையாய் இல்லை' என்று சொல்கின்றார்.

13:12ல் பாதம் கழுவும் நிகழ்வின் இரண்டாம் பகுதி தொடங்குகிறது. தான் செய்தது தன் சீடர்களுக்குப் புரியவில்லையென்று தெரிந்தாலும், 'நான் செய்தது உங்களுக்குப் புரிந்ததா?' என்று அவர்களிடம் கேள்வி கேட்கின்றார் இயேசு. இயேசு தன்னை 'ஆசிரியரும்,' (டிடாஸ்கலோஸ்) 'ஆண்டவரும்' (கிரியோஸ்) என அடையாளப்படுத்துகின்றார். தொடர்ந்து இரண்டு கட்டளைச் சொற்களோடு நிகழ்வு நிறைவடைகிறது:

அ. நீங்கள் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவுங்கள்.
ஆ. நான் செய்தது போல நீங்களும் செய்யுங்கள்.இந்த இடத்தில் 'நான் உங்களை அன்பு செய்ததுபோல நீங்களும் அன்பு செய்யுங்கள்' (13:34) என்ற வாக்கிய அமைப்பு இணைந்து செல்வதை நாம் காணலாம்.

ஈ. வாக்கும், வாழ்வும்

1. 'அறிதல், அன்பு செய்தல்.' நாம் தொடக்கத்தில் குறிப்பிட்ட இந்த நாளின் ஐந்து மறைபொருள்களை இந்த இரண்டு வாக்கியங்களில் சுருக்கிவிடலாம்.

அ. நற்கருணை என்பது இயேசு நம்மை அறிதலின், அன்பு செய்தலின் அடையாளம்.
ஆ. பணிக்குருத்துவத்தின் அழைப்பும் இவ்விரண்டே: தன் மக்களை அறிவதும் (காண். யோவா 10:1-10), அன்பு செய்வதும்.

இ. பாதம் கழுவும் நிகழ்வில் இந்த இரண்டு வினைச்சொற்கள்தாம் மேலோங்கி நிற்கின்றன.
ஈ. அன்புக் கட்டளையை நிறைவேற்ற அடிப்படைத்தேவை 'இயேசுவின் அன்பை அறிதல்.'
உ. முதல் ஏற்பாட்டு பாஸ்கா நிகழ்வில் இரண்டு பேர் அறிந்துகொள்கின்றனர்: உண்மையான இறைவன் யார் என்பதை எகிப்தின் பாரவோன் அறிந்து கொள்கின்றான். தங்கள் கடவுளின் அரும்பெரும் செயல்களையும், வலிமைமிகு கரத்தையும் கண்டு அவரே 'ஆண்டவர்' என இஸ்ரயேல் மக்கள் அறிந்து கொள்கின்றனர்.

இன்றைய சமூக வலைத்தளங்களின் ஆதிக்கத்தில், அறிதல் என்பது ஒருவரின் ப்ரொஃபைலை அறிதல், அன்பு செய்தல் என்பது மெசஜ் அனுப்புதல் என்று மிகவும் சுருங்கிவிட்டது. அறிவதும், அன்பு செய்வதும் எளிதான செயல்கள் அன்று. அதற்காக நிறைய நேரத்தையும், ஆற்றலையும், அக்கறையையும் ஒருவர் செலவழிக்க வேண்டும்.

தன் இறுதி நேரத்தில், தன் நேரத்;தை தனக்கென செலவிடாமல், தன் சீடர்களோடு கழிக்க நினைக்கிறார் இயேசு. இதுதான் இறுதிவரை செய்யும் அன்பு. பொதுநிலை மற்றும் அருள்நிலை உறவுநிலைகளில், குருத்துவம் மற்றும் திருமண வாழ்வில் இன்று பல நேரங்களில் 'இறுதிவரை அன்பு' சாத்தியப்படுவதில்லை. நான் செய்யும் அன்பிற்கு உடனடியாக நான் ஒரு பதிலை எதிர்பார்க்கிறேன். ஆக, என்னால் பல நேரங்களில் பாதிவரைதான் செல்ல முடிகிறது.

2. 'நீங்களும் பாதம் கழுவுங்கள்' என்ற இயேசுவின் கட்டளையை இன்று ரொம்ப சுருக்கிப் புரிந்து கொள்கிறோம். ஆனால் பாதம் கழுவுவது சாதாரண செயலா? இல்லை. இதைச் செய்ய நான் என் comfort zone லிருந்து எழ வேண்டும். என் அடையாளம் என்னும் ஆடையைக் கழற்ற வேண்டும். என் நிர்வாணத்தை ஏற்க வேண்டும். 'நான் இவ்வளவுதான்' என்று உணரும் தாழ்ச்சி வேண்டும். குனிய வேண்டும். கையை ஈரமாக்க வேண்டும். அழுக்காக்க வேண்டும். இவ்வளவு செயல்களை நான் செய்யத் தயாராக இருந்தால்தான் பாதம் கழுவுதல் சாத்தியமாகும்.

3. இயேசுவின் கைகளில் கொடுப்பது. நற்கருணை, குருத்துவம், அன்பு, பணிவிடை, பாஸ்கா இந்த ஐந்தும் 'இயேசு' என்ற அந்த ஒற்றை நபர் இல்லையென்றால் சாத்தியமே இல்லை. பாதம் கழுவுதல் என்னும் பழக்கம் எல்லா யூதர்களுக்கும் தெரிந்த ஒன்று. ஆக, இயேசு தன் போதனையின் ஒரு பகுதியாக அதை போதித்துவிட்டு சென்றிருக்கலாம். ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை. தானே செய்து காட்டுகின்றார். மேலும், மத்தேயு, மாற்கு, லூக்கா நற்செய்தியாளர்கள் இயேசு நற்கருணையை ஏற்படுத்திய நிகழ்வை விலாவாரியாக எழுத, யோவான், அதை எழுதாமல் விட்டுவிடுகின்றார். யோவானின் இயேசு துண்டையும், தண்ணீரையும் கொண்டு நற்கருணையை ஏற்படுத்துகிறார். அப்பத்தையும், இரசத்தையும் கொண்டு அல்ல.

மேலும், இயேசுவோடு சீடர் ஏற்படுத்திக்கொள்ளும் உறவுதான் முதற்படி. பாதம் கழுவ அனுமதித்தால்தான் இயேசுவோடு நமக்கு பங்கு உண்டு. ஆக, நம் கால்களை நீட்டி இயேசுவைத் தொட அனுமதிப்பதுதான் நான் அவரோடு கொள்ளும் உறவின் முதற்கட்டம். அவரைத் தொட நான் அனுமதிக்கும்போது எனக்கும் அவருக்கும் உள்ள உறவு அதிகமாகிறது. முதலில் இயேசுவின் அன்பை நான் அறிய வேண்டும். அந்த அன்பை நான் அனுபவிக்க வேண்டும். பின் அந்த அன்பை என் பணிவிடையாக மற்றவருக்குக் காட்ட வேண்டும். அன்பும், பணிவிடையும் கைகோர்த்தலே இயேசு சொல்லும் ஒப்பற்ற பாடம்.

'நீரா என் காலடிகளைக் கழுவப் போகிறீர்!' என்ற தயக்கம் விடுத்து, இயேசு நம்மைத் தொட அனுமதித்தால், அந்த தொடுதல், நாம் தொடும் நற்கருணை, குருத்துவம், திருமணம், சமூகம், விருந்து என அனைத்திலும் மாற்றத்தைக் கொண்டுவரும்.

*****

## 25 மார்ச் 2016: ஆண்டவரின் திருப்பாடுகளின் வெள்ளி

## ஏழு பேர் ஏழு விதமாய்

சிலுவைப்பாதையில் வழிநடந்து, இயேசுவின் பாடுகள் நிகழ்வோடு நம்மையே இறைவாக்கில் ஒன்றித்து, திருச்சிலுவையை ஆராதிக்கும் இந்நாளில் கல்வாரியில் இரண்டு சிலுவைகளுக்கு நடுவில் இருந்து இயேசுவின் சிலுவையை நோக்கி சிதறி விழுந்த வார்த்தைகளை ஒன்றாகக் கோர்த்து எடுத்து தியானிப்போம்.

(சிலுவையை நோக்கி பேசப்பட்ட வார்த்தைகள் என்னும் concept, Fulton Sheen மற்றும் Ellsworth Kalas அவர்களின் பேசுபொருள் ஆனது என்றாலும், பேசப்பட்ட வார்த்தைகளைத் தான் அவர்கள் சிந்தித்தனர். ஆனால் பேசியவர்களை விட்டுவிட்டனர். நாம் பேசியவர்களோடு இணைத்து அவர்களின் வார்த்தைகளைப் புரிந்து கொள்வோம். ஆக, கான்செப்ட் பழசுதான். ஆனால், கருத்துக்கள் கொஞ்சம் புதுசு!)

'ஐயோ! என்னை அவன் அப்படி பேசிட்டானே!' 'அவள் என்னைப் பற்றி என்ன சொல்லப் போகிறாளோ!' என்று நாம் பரிதவிக்கும் நேரமெல்லாம், நமக்குத் தோள்கொடுக்கும் இனியவர் நம்மிடம் சொல்லும் வார்த்தை என்ன தெரியுமா? 'நாலு பேரு நாலு விதமா சொல்லுவாங்க! அதையெல்லாம் நீ கண்டுக்காத!'

கல்வாரி மலையில் இயேசுவின் சிலுவையின் கீழ் நின்றவர்களை ஏழு பெயர்களில் பதிவு செய்கின்றனர் நற்செய்தியாளர்கள்.

1. வேடிக்கை பார்த்தவர்கள்: நிபந்தனை வார்த்தை

அவ்வழியே சென்றவர்கள் தங்கள் தலைகளை அசைத்து, 'கோவிலை இடித்து மூன்று நாளில் கட்டி எழுப்புகிறவனே, உன்னையே விடுவித்துக்கொள். நீ இறைமகன் என்றால் சிலுவையிலிருந்து இறங்கி வா' என்று அவரைப் பழித்துரைத்தார்கள். (மத் 27:39-40. மாற் 15:29-30)

'எனக்கு நடப்பது வரை நடப்பதெல்லாம் வேடிக்கைதானே!' என்று எண்ணிய மக்கள் கூட்டம், கூட்டமாய் வேடிக்கை பார்க்கின்றனர். அதுவும் 'பிறப்பு முன்னறிவிக்கப்பட்டவர்!' 'தூய ஆவியால் பிறந்தவர்!' 'கடவுளையே தந்தை என அழைத்தவர்!' 'இவர்தான் மெசியா!' என்று சொல்லப்பட்டவர், நிறைய அற்புதங்கள் செய்தவர், இரண்டு நாட்களுக்கு முன்பாக 'தாவீதின் மகனுக்கு ஓசான்னா!' என்று வெற்றிப்பவனியில் அழைத்துவரப்பட்டவர் - அப்படிப்பட்டவர் ஒருவர் சிலுவையில் அறையப்படுகின்றார் என்றால் கூட்டம் இன்னும் அதிகம் கூடும். மேலும் எருசலேமில் பாஸ்கா விழா நடைபெறும் நேரம் என்பதால், யூதேயா, கலிலேயா, சமாரியா என எல்லா ஊர்களிலிருந்தும் கூட்டம் வந்திருக்கும். இயேசுவின் வாழ்வில் அவர் செல்லும் இடமெல்லாம் கூட்டம் செல்கின்றது. கூட்டம் அவருக்கு உதவியாக இருந்ததைவிட பல நேரங்களில் தடையாகத்தான் இருக்கின்றது. இந்தக் கூட்டம்தான் முடக்குவாதமுற்றவரை வீட்டுக்குள் அனுமதிக்க இடம் தர மறுத்தது. இந்தக் கூட்டம்தான் பார்வையற்ற பார்த்திமேயுவைக் கடிந்து கொண்டது. இந்தக் கூட்டம்தான் இறுதியாக, 'சிலுவையில் அறையும்!' என்று கத்தியது. இந்தக் கூட்டம் கல்வாரியில் இயேசுவை வேடிக்கை பார்த்துக்கொண்டே வழிநடக்கிறது.

'நீ இம்மலையிலிருந்து குதி!' என்று அலகை இயேசுவைச் சோதித்த வார்த்தைகளைக் கொண்டே இப்போது அவரைச் சோதிக்கின்றனர். 'நீ அறிகுறி செய்தால் நாங்கள் நம்புவோம்!' என தங்களின் நம்பிக்கைக்கு நிபந்தனை விதிக்கிறது கூட்டம். ஆனால் இந்தக் கூட்டத்திற்குத் தெரியவில்லை, இயேசு தன் உடலாகிய கோவிலைப் பற்றிச் சொன்னார் என்று! மூன்றாவது நாளில் உயிர்ப்பார் என்பதும் அவர்களுக்குத் தெரியவில்லை. ஒருவேளை இயேசு இறங்கி வந்திருந்தால் அவரை நம்பியிருப்பார்களா? இல்லை. சிதறி ஓடியிருப்பார்கள்.

கூட்டத்தில் ஒருவராய் இருப்பது நம் அனைவருக்கும் பிடிக்கும். ஏனெனில் கூட்டம் தனிமனிதரின் முகத்தை மறைத்துக் கொள்கிறது. நேருக்கு நேர் ஒரு பிரச்சினையைப் பேசத் தயங்கும் நாம், சமூக வலைதளங்களில் புனைப் பெயர்களில் சொற்களை அள்ளி வீசுகிறோம். கூட்டத்தோடு கூட்டமாக நாமும் கோவிலுக்கு வருகிறோம். கூட்டம் உள்ள ஆலயங்களை நோக்கி திருப்பயணம் செய்கிறோம். 'நீ எனக்கு இதைச் செய், அதைச் செய்!' என நிபந்தனையும் விதிக்கின்றோம்.

எனக்கும், பிறருக்கும் உள்ள உறவுநிலைகளில்கூட நாம் நிபந்தனைகள் விதிக்கத் தொடங்கிவிட்டோம். 'என் பெற்றோர்கள் எனக்கு இதைச் செய்ய வேண்டும்! என் பிள்ளைகள் இதை எனக்குச் செய்யவில்லை! என் நண்பர் என்னைக் கண்டுகொள்வதில்லை!' என நாம் எதிர்ப்பார்ப்புகளை அடுக்கிக் கோட்டை கட்டுகிறோம். அல்லது, 'அவனுக்கு அப்படித்தான் நடக்கும்! நடக்க வேண்டும்!' என்று வேடிக்கை பார்த்து மகிழ்கின்றோம். இவை இரண்டுமே தவறே.

2. சமயப் பெரியோர்கள்: தாமதமான வார்த்தை

தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்களுடனும் மூப்பர்களுடனும் சேர்ந்து அவரை ஏளனம் செய்தனர். அவர்கள், 'பிறரை விடுவித்தான். தன்னைவே விடுவிக்க இயலவில்லை. இவன் இஸ்ரயேலுக்கு அரசனாம்! கடவுளிடம் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தானாம்! அவர் விரும்பினால் இப்போது இவனை விடுவிக்கட்டும். 'நான் இறைமகன்' என்றானே!' என்று கூறினார்கள். (மத் 27:41-43. மாற் 15:31. லூக் 23:35)

இயேசுவின் இறப்பின் பெரிய முரண் என்னவென்றால், அவரின் மரணம் ஒரு சமயப் படுகொலை. கடவுளாக வந்தவரை, கடவுளுக்கு அருகில் இருப்பவர்களே, பொய்க்குற்றம் சுமத்தி அவரை அழித்துவிட்டனர். இயேசுவின் வாழ்வின் விநோதமும் அதுவே. ஆலயம் மற்றும் கடவுளுக்கு அருகில் இருந்த தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்கள், மூப்பர்கள், பரிசேயர்கள், சதுசேயர்கள் அவரை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. ஆனால், ஆலயம் மற்றும் கடவுளை விட்டு வெகுதூரத்தில் இருந்த புறவினத்தார், பெண்கள், வரிதண்டுவோர், விலைமகளிர், விளிம்புநிலை மக்கள் அனைவரும் அவரை அடையாளம் கண்டுகொள்கின்றனர்.

இயேசுவின் திருமுழுக்கு மற்றும் உருமாற்ற நிகழ்வுகளில் கேட்கும் தந்தையின் குரல், 'இவரே என் அன்பார்ந்த மகன்' என ஒலிக்கிறது. இயேசு தந்தையின் மகன். கடவுளின் மகன். இறைமகன். அன்று எல்லாருக்கும் தெரிந்து வார்த்தைகளை, எல்லாரும் ஏற்றுக்கொண்ட வார்த்தைகளை, இவ்வளவு நாட்கள் ஏற்றுக்கொள்ளாத சமயப் பெரியோர்கள் இன்று, 'இவன் இறைமகன்' என்கின்றனர். 'இவன் தன்னையே இறைமகன் என்றானே!' என்று இன்று கல்வாரியில் சொல்லும் இந்த வார்த்தைகளை, அவர்கள் ஆலயத்தில் சொல்லியிருந்தால், மக்கள் நம்பியிருப்பார்களே! தாமதமாக வரும் இந்த வார்த்தைகளினால் பயன் என்ன? இன்னும் சில நிமிடங்களில்தான் இயேசு இறந்துவிடப்போகிறாரே!

இவர்களின் நம்பிக்கை இறுதி நேர நம்பிக்கை. தாமதமான நம்பிக்கை. புனிதர்கள் வாழ்விலும் நிறையப்பேர் இறைவனைத் தாமதமாகவே கண்டுகொள்கின்றனர். 'நான் உன்னை எவ்வளவு தாமதமாக அன்பு செய்தேன்! என் அன்பே! என் இனியா! என் அழகே!' என கசிந்துருகுகின்றார் அகுஸ்தினார். தாமதமாகக் கண்டாலும், தாங்கள் பெற்ற இறையனுபவத்தில் நிலைத்து நின்றனர் இவர்கள்.

நாம் பிறந்து சில வாரங்களில் திருமுழுக்கு பெற்ற நாள் முதல் இயேசுவை இறைமகன் என அறிக்கையிடுகின்றோம். சிலர் வயது வந்தபின் அவரை இறைமகன் என அறிக்கையிடுகின்றோம். ஆனால், என் நம்பிக்கை அறிக்கை என்னில், என் வாழ்வியல் கண்ணோட்டத்தில் ஏதாவது மாற்றத்தைக் கொண்டு வருகிறதா? இயேசுவுக்கு அருகிலேயே இருக்கும் நான் அவரை அடையாளம் கண்டுகொள்கின்றேனா? தாமதமாகக் கண்டுகொண்டாலும் அவரை இறுகப் பற்றிக்கொள்கின்றேனா? அவரை இறைமகன் என அறிக்கையிட்டால் நானும் இறைவனின் மகன், மகள் என்பதை ஏற்றுக்கொள்கிறேனா?

3. ஆட்சியாளர்கள்: பொறுப்பற்ற வார்த்தை

ஆட்சியாளர்கள், 'இவன் கடவுளின் மெசியாவும், தேர்ந்தெடுக்கப்பட்டவனுமானால் தன்னையே விடுவித்துக்கொள்ளட்டும்' என்று கேலி செய்தார்கள். (லூக் 23:35)

இந்த ஆட்சியாளர்கள் யார் என்பது பற்றி வரலாற்றில் தெளிவான குறிப்பு இல்லை. இயேசுவின் காலத்தில் உரோயைமர்கள்தான் யூதேயாவை ஆண்டாலும், பல ஆட்சிப் பொறுப்புகள் யூத சமயத்தின் பெரியவர்களிடமும், ஏரோது போன்ற குறுநில மன்னர்களிடமும்தான் இருந்தது. மேலும், சேனட்ரின் என்று சொல்லப்படும் யூதர்களின் தலைமைச் சங்கம் சட்டம் மற்றும் மேலாண்மையில் நிறைய அதிகாரங்களைக் கொண்டிருந்தது. இயேசுவின் இறப்புக்கு யார் காரணம்? உரோமையர்களா? யூதர்களா? என்ற வாதம் வரலாற்றின் பல பக்கங்களை நிரப்பியிருக்கின்றது.

இயேசு கைது செய்யப்பட்டு, தலைமைச் சங்கம், பிலாத்தின் முற்றம், ஏரோதின் அரண்மனை என அலைக்கழிக்கப்படுகின்றார். இந்த மூன்றில் இருந்தவர்களும் ஆட்சி செய்தவர்களே. தலைமைச் சங்கத்திற்கு இயேசு கண்ணில் விழுந்த தூசியாகத் தெரிந்தார். பிலாத்து அவரை ஒரு கலகக்காரனாகப் பார்த்துக் கைகழுவினான். ஏரோது தன் அரியணைக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று பயந்ததோடல்லாமல், இறுதி நேரத்திலும் இயேசு ஏதாவது அற்புதம் நடத்தமாட்டாரா என எதிர்பார்க்கின்றான். மொத்தத்தில், இயேசுவை விடுவிக்கும் அதிகாரம் கொண்டிருந்த ஆட்சியாளர்கள் அவரை விடுவிக்கத் தவறிவிட்டார்கள்.

'முடிந்தால் உன்னை விடுவித்துக்கொள்!' என்று இயேசுவைப் பார்த்துச் சொல்லும் வார்த்தையில் கேலி இருப்பதுபோல, இவர்களின் ஆணவமும் ஒளிந்திருக்கிறது. ஆட்சியாளர்கள் காலங்காலமாக நிரபராதிகளை நோக்கி கையை நீட்டுபவர்களாகவும், குற்றவாளிகளோடு கைகோர்ப்பவர்களுமாகவே இருக்கிறார்கள். தன் சகோதரன் ஆபேலின் மேல் பொறாமைப்பட்டு, அவனை ஏமாற்றி வயலுக்கு அழைத்துச் சென்று, கொலையும் செய்துவிட்டு, கடவுள் கேட்டபோது, 'நான் என்ன என் சகோதரனுக்கு காவலாளியா?' என்று பதில் கேள்வி கேட்டுவிட்டு, ஆபேலின் கல்லறைக்குச் செல்லும் காயின், 'முடிந்தால் நீ உயிரோடு வா!' என்று சொன்னால் எப்படி இருக்கும்? அப்படித்தான் இருக்கிறது ஆட்சியாளர்களின் வார்த்தை.

எனக்குள்ள தனிநபர் வாழ்வியல் மற்றும் குடும்பப் பொறுப்பைத் தட்டிக்கழிக்கும்போதும் நானும் இந்த ஆட்சியாளர்கள் போல பொறுப்பற்றுத்தான் இருக்கிறேன். கிறிஸ்தவ நம்பிக்கை வாழ்வு என்பது மிகவும் பொறுப்புணர்வோடு வாழ வேண்டிய வாழ்வு. ஒவ்வொரு நொடியையும் உணர்ந்து, மகிழ்ச்சியாக, முழுமையாக வாழ வேண்டிய வாழ்வு. 'என் ஆடுகள் வாழ்வு பெறவும், அதை நிறைவாகப் பெறவும் நான் வந்தேன்' (யோவா 10:10) என்று இயேசு தந்த வாழ்வை நிறைவாக வாழ நமக்குத் தேவை பொறுப்புணர்வு - 'இவன் என் சகோதரன்!' 'இவள் என் சகோதரி!' என எல்லாரையும் அரவணைக்கும் பொறுப்புணர்வு.

4. உதவியாளர்: நம்பிக்கையான வார்த்தை

அவர்களுள் ஒருவர் ஓடிச்சென்று, கடற்பஞ்சை எடுத்து புளித்த திராட்சை இரசத்தில் தோய்த்து, அதை ஒரு கோலில் மாட்டி, அவருக்குக் கொடுத்துக் கொண்டே, 'எலியா இவனைக் கீழே இறக்க வருவரா பார்ப்போம்!' என்றார் (மாற் 15:36).

இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு எடுபிடி வேலை செய்தவர்களும் இயேசுவை விட்டுவைக்கவில்லை. உரோமைப் படைவீரர்கள் பார்க்கத்தான் பலசாலிகள். ஆனால் சோம்பேறிகள். எந்த வேலையும் செய்ய மாட்டார்கள். எல்லாவற்றிற்கும் எடுபிடி அடிமைகளை வைத்திருப்பார்கள். தங்கள் படைக்கலங்கள், உணவு, பைகளைச் சுமக்க என்று தொடங்கி எல்லா வேலைகளையும் அடிமைகள்தாம் செய்வார்கள். சிலுவையில் அறையும் நிகழ்வுக்கும் நிறைய அடிமைகளின் துணை தேவைப்பட்டிருக்கும். ஆணிகளைக் கொண்டு வர, ஆணிகளை அறைய, இறந்தவர்களைத் தொட்டுத் தூக்க, காவல் காக்க, பிணந்திண்ணிக் கழுகுகளை விரட்டு என நிறைய வேலைகள் இருக்கும் அவர்களுக்கு.

'எலோயி! எலோயி! லெமா சபக்தானி!' என்று இயேசு, 'என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?' என்று தன் தந்தையை நோக்கி உரக்கக் கத்தியதை, தாகத்தால் கத்தியதாக நினைத்துக் கொண்டு, புளித்த திராட்சை இரசத்தை கடற்பஞ்சில் தோய்த்து நீட்டுகிறார் ஒருவர். 'எலோயி!' என்பதையும், 'எலியா' என தவறாகப் புரிந்துகொள்கின்றார்.

'எலியா இறக்க வருவார்!' என்ற நம்பிக்கை இருந்தாலும், இவருக்கு இருந்தது மூடநம்பிக்கை. அல்லது அரைகுறை நம்பிக்கை. அல்லது 'யாரும் வரமாட்டார்!' என்பதை 'வருவாரா பார்ப்போம்!' என்று ஏளனம் செய்யும் நம்பிக்கை. இயேசுவின் தாகம் தீர்க்க வேண்டும் என்ற நல்லெண்ணம் ஒரு பக்கம். இயேசுவைக் கேலி பேசும் எண்ணம் மறுபக்கம். இதுதான் பிளவுபட்ட மனம்.

பிளவுபட்ட இதயம் அல்லது மனம் கொண்டிருப்பது முதல் ஏற்பாட்டில் பெரிய பாவமாக கருதப்பட்டது. யாவே இறைவனை வழிபட வேண்டும். அல்லது சிலைகளை வழிபட வேண்டும். இரண்டும் வேண்டும் என்று நினைக்கக் கூடாது. பிளவுபட்ட மனம் நம் மனதின் அமைதியைக் கெடுத்துவிடுகிறது. ஒன்று இது. அல்லது அது. அவ்வளவுதான். யோசித்து தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்ந்தெடுத்தபின், அதில் நிலைப்புத்தன்மையோடு உறுதியாக இருக்க வேண்டும்.

5. கெட்ட கள்வன்: வெற்று வார்த்தை

சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த குற்றவாளிகளுள் ஒருவன், 'நீ மெசியாதானே! உன்னையும் எங்களையும் காப்பாற்று' என்று அவரைப் பழித்துரைத்தான். (லூக் 23:39)

இயேசுவுக்கு இடப்புறம்(!) - இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டவர்கள் இருவர் என்று லூக்கா சொல்கிறார். யார் இடப்புறம் அல்லது வலப்புறம் அறையப்பட்டார்கள் என்று சொல்லவில்லை. காலங்காலமாக புழக்கத்தில் இருக்கும் 'இடது' என்றால் 'கெட்டது,' 'வலது' என்றால் 'நல்லது' என்ற நம் எண்ணம்தான் இவர்களை இடப்புறம், வலப்புறம் எனப் பிரித்துவைக்கிறது - அறையப்பட்ட கள்வனின் உள்ளத்தில் நிறைய கோபம் இருக்கிறது. அந்தக் கோபம்தான் மேற்காணும் வார்த்தைகளில் வெடிக்கிறது.

'நான் யார் என்று மக்கள் சொல்கிறார்கள்?' 'நான் யார் என்று நீங்கள் சொல்கிறீர்கள்?' என்று இயேசு தம் சீடர்களைக் கேட்டபோது, 'நீர் மெசியா, உயிருள்ள கடவுளின் மகன்!' என்கிறார் பேதுரு. இந்தக் கள்வனும், 'நீ மெசியா!' என இயேசுவைப் பார்த்துச் சொல்கிறான். பேதுருவின் வார்த்தைகள் நம்பிக்கையால் உந்தப்பட்டவை. கள்வனின் வார்த்தைகளில் தன் இயலாமையால் உந்தப்பட்டவை.

குறுக்குவழியில் பணம், குறுக்குவழியில் பொருள், குறுக்குவழியில் இன்பம் என எல்லாவற்றையும் குறுக்குவழியில் பெற, அனுபவிக்க பழகியிருந்த கள்வனின் மனம், மீட்பையும் குறுக்குவழியில் பெற்றுவிடத் துடிக்கிறது. இயேசுவிடமிருந்து மீட்பை ஏமாற்றிப் பறிக்க நினைக்கிறான் கள்வன். 'உன்னையும் என்னையும் காப்பாற்று!' என இயேசுவையும் குறுக்கு வழிக்கு இழுக்கிறான்.

குறுக்கு வழியில் மீட்பு என்று இயேசு நினைத்திருந்தால், பாலைவனத்தில் அலகையோடு சமரசம் செய்திருப்பார். தன்னை அரசானக்க நினைத்த மக்களோடு சமரசம் செய்திருப்பார். தனக்கு எதிராக இருந்த யூத தலைவர்களோடும், ஆட்சியாளர்களோடும் சமரசம் செய்திருப்பார். ஆனால், இயேசு குறுக்கு வழியை ஒருபோதும் தேர்ந்து கொள்ளவில்லை.

கெட்ட கள்வனின் வார்த்தை வெற்று வார்த்தை. அவனது நம்பிக்கை அடிப்பாகம் இல்லாத வாளி போன்றது. அதை வைத்து எத்தனை முறை நீர் இறைத்தாலும் தண்ணீர் வந்து சேரப்போவதில்லை. இன்று இயேசுவைப் பற்றிய எனது அறிக்கை வெற்று நம்பிக்கையா? இயேசுவை நானும் என் குறுக்கு வழிக்கு இழுத்துவிட நினைக்கிறேனா?

6. நல்ல கள்வன்: துணிச்சலான வார்த்தை

பின்பு மற்றவன், 'இயேசுவே, நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும்' என்றான். (லூக் 23:42)

கெட்ட(!) கள்வனின் வார்த்தைகளைக் கேட்ட நல்ல(!) கள்வன், 'கடவுளுக்கு நீ அஞ்சுவதில்லையா? நீயும் அதே தீர்ப்புக்குத் தானே உள்ளாகி இருக்கிறாய். நாம் தண்டிக்கப்படுவது முறையே. நம் செயல்களுக்கேற்ற தண்டனையை நாம் பெறுகிறோம். இவர் ஒரு குற்றமும் செய்யவில்லையே!' என்று தன் நண்பனைக் கடிந்து கொண்டதோடல்லாமல், இயேசுவைப் பார்த்தும் பேசுகின்றான்.

சிலுவை தரும் வலியில் இவ்வளவு வார்த்தைகளை கள்வன் கோர்வையாகவும், தெளிவாகவும் பேசியிருப்பானா என்று நமக்குத் தெரியவில்லை. 'இயேசு குற்றமற்றவர்' என்பதை நல்ல கள்வனின் வாய்மொழியாக பதிவு செய்கின்றார் நற்செய்தியாளர் லூக்கா. இந்தக் கள்வன் இயேசுவை, 'இயேசுவே!' என பெயர் சொல்லி அழைத்து, உரிமை கொண்டாடுகிறான். 'ரபி,' 'போதகரே,' என அழைத்தவர்கள் எல்லாம் உள்நோக்கத்தோடு அழைக்கிறார்கள் என்று இயேசு அறிந்ததால்தான், 'மண்ணுலகில் நீங்கள் யாரையும் தந்தை என்றோ, போதகர் என்றோ, ரபி என்றோ அழைக்க வேண்டாம்!' என தன் சீடர்களுக்குக் கற்பிக்கின்றார்.

'இயேசுவே!' என்ற கள்வனின் அழைப்பு, அவன் இயேசுவோடு ஆத்மார்த்த அளவில் ஏற்படுத்திக்கொண்ட மானசீக உறவைக் குறிக்கிறது. இயேசுவோடு தனிப்பட்ட உறவை ஏற்படுத்திக் கொள்ள ஒரு நொடி போதும். இயேசுவின்மேல் அளப்பரிய நம்பிக்கையும் கொண்டிருக்கின்றான் கள்வன். 'நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது!' என்று இயேசுவின் இரண்டாம் வருகையையும் முன்னுரைக்கின்றான். இவன் இனி கள்வன் அல்ல. மீட்படைந்த புதிய இஸ்ரயேலின் முதல் சீடன் இவன். முதல் இறைவாக்கினன் இவன்.

7.நூற்றுவர் தலைவர்: சாட்சிய வார்த்தை

நூற்றுவர் தலைவரும் அவரோடு இயேசுவைக் காவல் காத்தவர்களும் நிலநடுக்கத்தையும் நிகழ்ந்த யாவற்றையும் கண்டு மிகவும் அஞ்சி, 'இவர் உண்மையாகவே இறைமகன்' என்றார்கள். (மத் 27:54. மாற்கு 15:39). 'இவர் உண்மையாகவே நேர்மையாளர்.' (லூக் 23:47)

'எல்லாம் நிறைவேறிற்று! தந்தையே உன் கைகளில் என் ஆன்மாவை ஒப்படைக்கிறேன்!' என்று தலைசாய்த்து தன் ஆவியை ஒப்படைத்த இயேசுவின் உடலை ஊடுருவக் குத்திய நூற்றுவர் தலைவன், அதிலிருந்து வெளியேறிய தண்ணீரையும், இரத்தத்தையும் கண்டு, 'இவரே உண்மையான இறைமகன்!' என அறிக்கையிடுகின்றார்.

'தாங்கள் ஊடுருவக் குத்தியவரை உற்று நோக்குவர்!' (யோவா 19:37) என்ற இறைவாக்கினர் செக்கரியாவின் வாக்கு (12:10) இங்கே நிறைவேறுகிறது.

நூற்றுவர் தலைவர் ஒரு புறவினத்தார். இவரே புறவினத்தாரின் முதல் நற்செய்தி அறிவிப்பாளர். இயேசுவை இறைமகனாகவும், நேர்மையாளராகவும் கண்டுகொள்கிறார். தான் கண்டுகொண்டதை, தான் அனுபவித்ததை சான்று பகர்கின்றார்.

இந்த ஏழுபேருமே நம்மிலும் இருக்கின்றார்கள். நாமும் இயேசுவை நோக்கி, இயேசுவின் சிலுவை நோக்கிப் பேசுகின்றோம். அவரை நோக்கிய நம் வார்த்தைகள் அவரை எதுவும் பாதிப்பதில்லை. ஆனால், அவை நம்மை வெகுவாகப் பாதிக்கின்றன.

மேற்காணும் ஏழு பேரின் ஏழு விதமான வார்த்தைகளும், 'நம்பிக்கையின்மை' என்ற புள்ளியிலிருந்து 'நம்பிக்கை' என்ற புள்ளியை நோக்கி நகர்கின்றன. நாமும் 'குறைவான நம்பிக்கை,' 'அவநம்பிக்கை,' 'மூடநம்பிக்கை' என்னும் புள்ளிகளை விடுத்து, 'நம்பிக்கை' என்ற புள்ளி நோக்கி நகர்வோம்.

ஏனெனில், இயேசுவைப் பற்றிய நம் அறிவெல்லாம் இது ஒன்றிற்காகத்தான்: 'இயேசுவே இறைமகனாகிய மெசியா என நீங்கள் நம்புவதற்காகவும், நம்பி அவர் பெயரால் வாழ்வு பெறுவதற்குமாகவே!' (யோவா 20:31).

*****

**26 மார்ச் 2016: ஆண்டவரின் பாஸ்கா - நள்ளிரவு மற்றும் உயிர்ப்பு நாள்**

**உயிர்ப்பு என்னும் வியப்பு**

பாஸ்கா இரவுத் திருப்பலியில், ஏழு முதல் ஏற்பாட்டு வாசகங்களும், ஒரு திருமுகமும், ஒரு நற்செய்தி வாசகமும் என மொத்தம் ஒன்பது வாசகங்கள் வாசிக்க வேண்டிய அறிவுறுத்தல் இருந்தாலும், இவற்றில் ஐந்து வாசகங்களையாவது வாசிக்க வேண்டியது கட்டாயம்.

ஒளி, இறைவார்த்தை, திருமுழுக்கு, நற்கருணை என இன்றைய வழிபாடு ரொம்ப கலர்ஃபுல்லாக இருக்கிறது. இந்த இரவு திருவிழிப்புதான் எல்லா திருவிழிப்புகளுக்கும் தாய் என்றும் அழைக்கப்படுகின்றது. முதல் ஏற்பாட்டு நிகழ்வான விடுதலைப்பயணத்தையும், இயேசுவின் உயிர்ப்பையும் இணைத்து இன்றைய வழிபாடு உருவாக்கப்பட்டிருக்கிறது.

இன்றைய முதல் வாசகத்தில் (தொடக்கநூல்) 'இல்லாமையிலிருந்து' 'இருப்புக்கும்', 'குழப்பத்திலிருந்து,' 'தெளிவுக்கும்,' 'இருளிலிருந்து,' 'ஒளிக்கும்' உலகம் கடந்து வருகிறது. இதுதான் படைப்பு.

இரண்டாம் வாசகத்தில் (விடுதலைப்பயணம்) 'எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து,' 'வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கும்,' 'பாரவோனை அரசனாகக் கொண்டதிலிருந்து,' 'யாவேயை அரசனாகக் கொள்வதற்கும்,' 'வாக்குறுதிக்கான காத்திருப்பிலிருந்து,' 'வாக்குறுதியின் நிறைவேறுதலுக்கும்' கடந்து செல்கின்றனர் இஸ்ரயேல் மக்கள். இதுதான் விடுதலைப்பயணம்.

மூன்றாம் வாசகத்தில் (எசேக்கியேல்) 'உலர்ந்த நிலையிலிருந்து,' 'உயிர்பெற்ற நிலைக்கு' எலும்புகளும், 'நாடுகடத்தப்பட்ட நிலையிருந்து,' 'சொந்த நாடு திரும்பும் நிலைக்கு' இஸ்ரயேல் மக்களும் திரும்புகின்றனர். இது அவர்களுக்கு இரண்டாம் மீட்பு.

நான்காம் (உரோமையர்) மற்றும் ஐந்தாம் வாசகங்களில் (லூக்கா), இயேசுவின் உயிர்ப்பு மையமாக இருக்கின்றது. 'இறப்பிலிருந்து,' 'உயிர்ப்புக்கு' இயேசு கடந்து போனதை கிறிஸ்தவ வாழ்வின் உருவகமாக பவுலும், 'உயிரற்ற அவர்,' 'உயிரோடிருக்கும் நிலைக்கு' என நேரிடையாக லூக்காவும் சொல்கின்றனர்.

ஆக, மேற்காணும் இந்த ஐந்து நிலைகளிலும், முன்னால் இருந்தது இப்போது இல்லை.

முன்னால் இருந்த குழப்பம் இல்லை.

முன்னால் இருந்த அடிமைத்தனம் இல்லை.

முன்னால் இருந்த நாடுகடத்தல் இல்லை.

முன்னால் இருந்த பாவ இயல்பு இல்லை.

முன்னால் இருந்த இறப்பு இல்லை.

'முந்தைய நிலை' மாறிவிட்டது. அல்லது 'கடந்து விட்டது'.

எதற்காக மனித மனம் இந்த கடத்தலை அல்லது மாற்றத்தை விரும்புகிறது? இந்த ஐந்து நிகழ்வுகளும் அறிவியல் கோட்பாட்டிற்கும், லாஜிக்கிற்கும் அப்பால் இருக்கின்றன. இருள் ஒளியாகிறது. தண்ணீர் வறண்ட நிலமாகிறது. எலும்பில் சதையும் உயிரும் பிறக்கிறது. பாவம் புதுவாழ்வாகிறது. உயிரற்ற உடல் உயிர் பெறுகிறது.

இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு விட்டனர். பாதி வழி வந்துவிட்டனர். தங்களுக்கு முன்னால் செங்கடல். தங்களுக்குப் பின்னால் பாரவோனின் குதிரைப் படைகள். இரண்டு பக்கம் சென்றாலும் அழிவுதான் என நினைத்தவர்கள் கண்முன், செங்கடல் இரண்டாகப் பிளக்கின்றது. உலர்ந்து தரை உருவாகிறது. கால்கள் நனையாமல் கடந்து செல்கின்றனர்.

சிலுவை, இறப்பு, கல்லறை என்று எதுவும் இயேசுவைத் தன்னகத்தே வைத்துக்கொள்ள முடியவில்லை. சிலுவையை, இறப்பை, கல்லறையை வெறுமையாக்கி வெளியே வருகின்றார் இயேசு.

'உலர்ந்த தரை' முதல் ஏற்பாட்டு பாஸ்காவின் அடையாளம். 'வெற்றுக்கல்லறை' இரண்டாம் ஏற்பாட்டு பாஸ்காவின் அடையாளம்.

1. இயேசுவின் வார்த்தைகளும், வெற்றுக் கல்லறையும்

நடுவில் கல்லறை. இந்தப் பக்கம் இருந்து பெண்கள் சிலர் தங்கள் கைகளில் நறுமணப் பொருட்களை எடுத்துக்கொண்டு கல்லறை நோக்கிச் செல்கின்றனர். அந்தப் பக்கம் இருந்து வானதூதர்கள் இருவர் இறங்கி வந்துகொண்டிருக்கின்றனர். பெண்கள், 'இறந்துவிட்டார்' என நினைக்கின்றனர். வானதூதர்கள் 'உயிர்த்துவிட்டார்' என்கின்றனர். ஆபிரகாமைப் போல இருக்கிறார்கள் இந்தப் பெண்கள். ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கை மலைக்கு இந்தப் பக்கம் கூட்டிக் கொண்டு ஏறியபோது, மலைக்கு அந்தப் பக்கம் ஆண்டவர் ஆட்டுக்குட்டி ஒன்றை ஏற்றிக்கொண்டு வருகின்றார். ஆபிரகாம் நம்பினார். கடவுள் தன் மகனைத் திருப்பித் தருவார் என்று நம்பவில்லை. மாறாக, தன் வாக்குறுதியை அவர் நிறைவேற்றுவார் என நம்பினார்.

இயேசுவின் வார்த்தைகளில் இருந்து வாக்குறுதியை மேற்காணும் பெண்கள் புரிந்து கொள்ளவில்லை. அதை நம்பவும் இல்லை. ஆகையால்தான், வானதூதர்கள், 'கலிலேயாவில் இருக்கும்போது அவர் உங்களுக்குச் சொன்னதை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள். மானிட மகன் பாவிகள் கையில் ஒப்புவிக்கப்பட்டுச் சிலுவையில் அறையப்பட வேண்டும். மூன்றாம் நாளில் உயிர்த்தெழ வேண்டும் என்று சொன்னாரே' (லூக் 24:6-7) என அவர்களுக்கு நினைவுபடுத்துகின்றனர்.

ஆக, இயேசுவின் உயிர்ப்பை நம்ப வேண்டுமெனில், அவரின் வார்த்தைகளை நம்ப வேண்டும். இயேசுவின் உயிர்ப்பை அவருடைய பணிவாழ்வு மற்றும் இறப்பிலிருந்து பிரித்து தனியாகப் பார்க்க முடியாது. தனியாகப் பார்ப்பதால் பயன் ஒன்றும் இல்லை. ஏனெனில், இயேசுவின் வாழ்வில் உயிர்ப்பு அவரின் இறப்பின் மூன்றாம் நாள் நடந்த நிகழ்வு மட்டுமல்ல. அவரின் வாழ்வின் ஒவ்வொரு நாளும் உயிர்ப்பு நாளாக இருந்தது. 'அகிலத்தை படைத்த ஆண்டவர் எப்படி மனுவுருவாக முடியும்?' என்று நினைத்தபோது, மரியாளின் வயிற்றில் மனுவுரு ஏற்றார். 'எல்லாக் குழந்தைகளோடும் சேர்த்து இவரை அழித்தாயிற்று' என்று ஏரோது தன் நாற்காலியில் சாய்ந்து ஓய்ந்திருந்தபோது, தன் வளர்ப்புத் தந்தையின் பாதுகாவலில் எகிப்துக்குச் சென்றார். அலகையின் சோதனைகளை வென்றபோது, 'எங்களுக்கு அரசனாக இரும்!' என்று மக்கள் தந்த சோதனைகளை வென்றபோது, 'திராட்சை ரசம் தீர்ந்துவிட்டது,' 'மக்கள் பசியாக இருக்கிறார்கள்,' 'பேய் பிடித்திருக்கிறது,' 'முடக்குவாதம்,' 'தொழுநோய்,' 'விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்,' என எல்லாரும் தங்கள் வாழ்வு முடிந்து விட்டது என நினைத்தபோது, அவர்கள் வாழ்விலும் 'விடிவை' ஏற்படுத்துகிறார். மீன் வலைகளையும், சுங்கச் சாவடியையும் தாண்டிச் சிந்திக்கத் தெரியாத திருத்தூதர்களை தன்னகத்தே வைத்துக்கொண்டு, 'கடவுளை தந்தை' என்ற அழைக்கக் கற்றுக்கொடுத்தார். 'மன்னிப்பு,' 'இரக்கம்,' 'அமைதி' என மக்கள் கேட்டிராத, அனுபவித்திராத எல்லாவற்றையும் போதித்தார். ஒவ்வொரு நாளும் உயிர்ப்பு அனுபவம் பெற்றவருக்கு, இறப்புக்கு பின் நிகழ்வதும் உயிர்ப்பு அனுபவமே. இப்படி 'முடிவு என நினைத்த எல்லா நிகழ்வுகளிலும் விடிவு' என எழுந்தவர், இறப்பிலும் உயிர்த்தார் என நம்ப வேண்டுமெனில் இயேசுவின் வார்த்தைகளோடு இந்த வெற்றுக்கல்லறையைப் பார்க்க வேண்டும்.

2. 'உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்? அவர் இங்கே இல்லை.' (24:5-6அ)

இரண்டு வாக்கியங்கள். முதல் வாக்கியம் ஒரு கேள்வியாகவும், அடுத்த வாக்கியம் ஒரு செய்தியாகவும் இருந்தாலும், இரண்டு வாக்கியங்களின் பொருள் ஒன்றுதான்: 'இயேசு கல்லறையில் இல்லை.' இயேசுவின் பிறப்பின்போது, வானதூதர் கபிரியேல் பெண் மரியாவுக்கு மங்கள வார்த்தை அறிவித்தார். அவர் இறந்தபின், வானதூதர் இருவர், பெண்கள் சிலருக்கு மங்கள வார்த்தை அறிவிக்கின்றனர். மரியாவும் தயக்கத்தில், 'இது எங்ஙனம் ஆகும்? நானோ கணவனை அறியேனே!' என்றார். இங்கே பெண்கள் தயக்கத்தில் தலைகுனிந்து நிற்கின்றனர். மரியாளிடமும் வானதூதர் இதை வாக்கியத்தைத்தான் சொல்லியிருப்பார்: 'அவரை இனி வானத்தில் தேடுவதேன்! அவர் அங்கு இல்லை. இதோ உன் வயிற்றில் இருக்கின்றார்.'

'அவர் இங்கு இல்லை' என பதிவு செய்கிறார் லூக்கா. இதை வாசிப்பவர்களுக்கு உடனே கேள்வி வரும். அப்படியென்றால், 'அவர் எங்கே இருக்கிறார்?' இந்தக் கேள்விக்கு விடையாக லூக்கா தொடர்ந்து இரண்டு நிகழ்வுகளைப் பதிவு செய்கின்றார்: (அ) எம்மாவு நிகழ்வு (24:13-35), (ஆ) இயேசு சீடர்களுக்குத் தோன்றும் நிகழ்வு (24:36-49). வேறு எந்த நிகழ்வுகளும் இதற்குப் பின் இல்லை. எம்மாவு நிகழ்வில் பயணம் செய்யும் சீடர்களோடு இயேசு பயணம் செய்கின்றார். ஒரே அறையில் கூடியிருந்த சீடர்களுக்குத் தோன்றி அவர்களைத் தேற்றுகின்றார். ஆக, கல்லறையில் இல்லாத இயேசு எங்கே இருக்கிறார்? நாம் பயணம் செய்யும் இடத்திலும், நாம் வாழும் இடத்திலும். நம் பயத்தில், குழப்பத்தில், அமைதியின்மையில், வெறுமையில், தயக்கத்தில் அவர் நம்மோடு வழிநடக்கின்றார். மரியாளின் தயக்கத்திற்கு வானதூதர்களின் வார்த்தைகள் மருந்திட்டதுபோல, நம் தயக்கத்திற்கும் இந்த இரண்டு வானதூதர்களின் வார்த்தைகள் மருந்திடட்டும்.

3. 'பேதுரு ஓடினார். கல்லறைக்குள் சென்றார். துணிகளை மட்டுமே கண்டார். நிகழ்ந்தவற்றைக் குறித்து வியப்புற்றார்.' (24:12)

'கல்லறையிலிருந்த கல் புரட்டப்பட்டது இயேசு வெளியே செல்வதற்காக அல்ல. சீடர்கள் உள்ளே செல்வதற்கே!' என்கிறார் அகுஸ்தினார். ஏனெனில், பூட்டிய அறைக்குள் நுழைந்த இயேசுவுக்கு, சீல் வைக்கப்பட்ட கல்லறையிலிருந்து வெளியே வருவது எளிதுதானே.

கல்லறைக்குள் சென்று, இயேசுவின் உடலைக் காணாமல், துணிகளை மட்டுமே கண்ட பேதுருவின் உள்ளுணர்வை, 'வியப்பு' என்று பதிவு செய்கின்றார் லூக்கா. ஆனால் யோவானோ, 'கண்டார், நம்பினார்' (20:8) என எழுதுகின்றார். மேலும், யோவான் நற்செய்தியில் பேதுரு தனியே கல்லறையை நோக்கி ஓடவில்லை. யோவானும் உடன் ஓடுகின்றார். ஆனால், லூக்காவில், பேதுரு தனியாக ஓடுகின்றார். இது எதற்காக? இறுதி இராவுணவின்போது பேதுருவிடம் தனியாக பேசும் லூக்காவின் இயேசு, 'சீமோனே, நீ மனந்திரும்பியபின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்து' (22:32) என்கிறார். ஆக, இப்போது தன் கல்லறை அனுபவத்தால் உறுதிபெற்ற பேதுரு இனி தன் உடன் திருத்தூதர்களை உறுதிப்படுத்துவார்.

'வியப்படைதல்' என்னும் வினைச்சொல் இரண்டாம் ஏற்பாட்டு நூல்களில் மொத்தம் 43 முறையும், லூக்கா நற்செய்தியில் 13 முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த 13 முறைகளும் இறைவனின் ஆற்றல்மிகு செயல்களை நினைத்து கதைமாந்தரும் மக்களும் வியப்படைவதையே இது குறிக்கின்றது. சக்கரியா சிலேட்டில், 'இவன் பெயர் யோவான்' என எழுதியபோது (1:63), இயேசுவின் பிறப்பை இடையர்கள் கேட்டபோது (2:18), இயேசுவை அவருடைய பெற்றோர் எருசலேம் ஆலயத்தில் கண்டபோது (2:33), இயேசுவின் தொழுகைக்கூட உரையைக் கேட்டபோது (4:22) என மக்களின் வியப்பை இது குறித்தாலும், ஒரே ஒரு முறை 'இயேசு வியப்படைந்தார்' என பதிவு செய்கின்றார் லூக்கா. நூற்றுவர் தலைவனின் நம்பிக்கையை பாராட்டுகின்ற இயேசுவை இப்படி வர்ணிக்கின்றார் லூக்கா: 'இவற்றைக் கேட்ட இயேசு வியப்புற்றார்...மக்கள் கூட்டத்தைப் பார்த்து, 'இஸ்ரயேலரிடத்திலும் இத்தகைய நம்பிக்கையை நான் கண்டதில்லை' என்றார்' (7:9). இயேசுவின் இறப்பின்போது இறுதி வார்த்தை பேசியது யார்? நூற்றுவர் தலைவன்தான் (23:47). நூற்றுவர் தலைவனின் நம்பிக்கை நிகழ்வை மறைமுகமாக இங்கே பதிவு செய்து, இயேசுவுக்கு தான் பயன்படுத்திய 'வியப்பு' என்ற வார்த்தையை 'பேதுருவுக்கு' பயன்படுத்துகின்றார் லூக்கா. இந்த இரண்டு நிகழ்வுகளையும் இணைத்துப் பார்த்தால் நமக்கு என்ன தெரிகிறது? நம்பிக்கைதான் வியப்பின் முதல் படி. நம்பிக்கை இல்லாமல் வியப்பு இல்லை. பேதுரு நம்பிக்கை கொண்டதலே வியப்படைகின்றார்.

வெற்றுச் சிலுவை இயேசுவின் இறப்பிற்கும், வெற்றுக் கல்லறை அவரின் உயிர்ப்பிற்கும், வெற்று ஆடைகள் அவரின் உடனிருப்புக்கும் சான்றாய் இருக்கின்றன.

ஆண்டவரை அவரின் வார்த்தைகள் மற்றும் வாக்குறுதிகளோடு இணைத்துப் பார்ப்பதும்,
அவரை நம் பயத்திலும், பயணத்திலும், வாழ்விடத்திலும் கண்டுகொள்வதும்,
வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் நம்பிக்கையும், வியப்பும் கொண்டிருத்தலுமே உயிர்ப்பு அனுபவம்.

உயிர்ப்பு திருநாள் வாழ்த்துக்களும், செபங்களும்!